Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 40

## "தோழி கூற்றுப் பாடல்கள் உணர்த்தும் அகத்திணை மாந்தர்கள்"

***சி. பிரபாவதி***
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*அரசு கலைக்கல்லூரி, தருமபுரி - 636 705.*
***நெறியாளர் முனைவர் ச. அழகிரி***
*உதவிப்பேராசிரியர் (பணி நிறைவு), தமிழ்த்துறை,*
*அரசு கலைக்கல்லூரி, தருமபுரி – 636 705.*

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் திணை துறைகளுக்குத் தரும் சிறப்பைக் காட்டிலும் அகமாந்தர்களுக்கு சிறப்பிடம் தந்துள்ளதை காணமுடிகிறது. சங்க இலக்கியங்களில் திணை அடிப்படையிலும், கூற்று அடிப்படையிலும் பாடல்கள் அமைந்துள்ளன. அகமாந்தரின் மன உணர்வுகள் கூறுவோரின் இன்ப, துன்ப மனநிலைக்கு ஏற்பவும் கேட்போரின் மனநிலைக்கு ஏற்பவும் மாறுபட்டு ஒலிக்கின்றன. இலக்கண, இலக்கியங்களில் அகமாந்தர்களையும் அவர்தம் உணர்வுகளையும் முன்னிலைப்படுத்துகின்றனர். தலைவன் தலைவியின் காதல் மன உணர்வுகளையும், அவ்வுணர்களுக்குத் துணைநிற்கும் பிற அகமாந்தர்களின் மன உணர்வுகளையும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

### சங்க இலக்கியங்களில் இடம்பெறும் அகமாந்தர்கள்

- தோழி
- தலைவி
- தலைவன்
- நற்றாய்
- செவிலி
- பாங்கன்

## தோழி

சங்க இலக்கியத்தில் இன்றியமையா இடம்பெறுபவள் தோழி. அகத்திணை மாந்தர்களுள் தோழிக்கெனத் தனிச்சிறப்பிடம் உண்டு. களவு, கற்பு ஆகிய இருநிலைகளிலும் பெரும்பங்கு ஏற்பவள் தோழி. தலைவன் தலைவியரிடையே அரும்பும் காதல் மலர்ந்து, காய்த்துக் கனிவதற்குத் தோழி உறுதுணையாகிறாள். தலைவனும் தலைவியும் செல்வநிலையில் ஓங்கி நிற்கும்போது தோழி சொல், செயல் ஆகியவற்றை அவர்களுக்கு உணர்த்துகிறாள். அதனால்தான் தோழி துணைப்பாத்திரமாயினும் இணையில்லா நிலைமையில் முதல்நிலையில் வைத்து எண்ணப்படுகிறாள். சொல்லும் செயலும் எப்போதும் ஒன்றிருப்பதில்லை. இருநிலைகளிலும் பெருமைப்பாத்திரமாக விளங்குகிறாள்.

தோழியின் கூற்றில் தனிமைப் புலம்பலும், மனப்போராட்டங்களும் காணப்படவில்லை. தோழி அறிவில் ஓங்கி உயர்ந்த நிலையில் இருக்கிறாள். இதனை,

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான"[1]

என்ற தொல்காப்பியரின் கூற்றிற்கு ஏற்பச் சிறந்த நிலையில் விளங்குபவள் தோழி.

தலைவியின் வாழ்வில் தோழியின் இடத்தை வேறு எந்தத் துணைமாந்தராலும் நிரப்பமுடியாது. இதனை உணர்ந்த தலைவி,

'அறிவுரை கூறித் தெருட்டும் நின்பணி
சிறப்பதாக நீ நெடிது வாழ்க'

என்று தோழியின் செயலைப் புகழ்ந்து வாழ்த்துவதை காணமுடிகிறது. தோழி இல்லையென்றால் தலைமக்களின் காதல் வாழ்க்கை இல்லை என்று கூறும்படி முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளதை சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகிறது.

## தலைவி

அகத்திணை மாந்தர்களை இணைத்து நிற்கும் இணைப்புப்பாலம் தோழி எனில் அகத்திணை வட்டத்திற்கு அமைந்த மையப்புள்ளி தலைவி. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளின் உரிப்பொருள்களாகிய புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய ஐவகை உணர்வுகளும் தலைவியை மையமாகக் கொண்டுள்ளது.

அகப்பாடலில் தலைமைபெறும் தலைவி களவு வாழ்க்கையில் படும் துயரங்கள் பல. தலைவனுக்கு நேரும் இடர்கள் குறித்து வருந்தும் தலைவி, தாய், செவிலி ஆகியோருக்கு கட்டுப்பட்டு வாழ்கிறாள். கற்பு வாழ்க்கையில் இடம்பெறும் தலைவி தலைவனைப் பிரிந்து வருந்தும் நிலையிலும் தனது பணிகளைச் செம்மையாகச் செய்கின்றாள்.

"நெடுங்கொடி நுடங்கும் நற்வுமலி பாக்கத்து
நாட்டுன்ற பட்ட மோட்டிரு வராஅற்
நுடிக்கட் கொழுங்குறை நொடுத்துண்டாடி
வேட்டமறந்து துஞ்சும் கொழுநர்"[2]

என்ற பாடலடியில் தலைவன் கள் குடித்து தன் கடமையை மறந்த நிலையில்கூடத் தலைவி மனம் நோகாது உணவு பரிமாறுவாள். ஆனால் தலைவன் பரத்தையரிடம் சென்ற தவறைப் பொறுத்துக்கொள்ளமாட்டாள் என்கிறது அகம்.

உண்மையான காதல் நெஞ்சை உடைய தலைவி தலைவனிடத்தில் உனக்குத் துணையாக வருவதைவிட வேறு இன்பமெல்லாம் இன்பமாகாது என்கிறாள். இதனை,

"அன்பு அறச்சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அது அல்லது
இன்பமும் உண்டோ எமக்கு"[3]

என்று தலைவியின் உள்ளத்தில் உள்ள காதலை வெளிப்படுத்துகிறது கலித்தொகை.

தலைவன் தலைவியிடம் கொண்டிருக்கும் காதல் உண்மையாகவும், உறுதியாகவும் இருந்தது. தலைவன் தலைவியின் இன்ப வாழ்க்கையைக் குறிக்கோளாகவும் இனிய நினைவுகளை இன்ப ஊற்றாகவும் கொள்கிறான். இதனை,

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்துன்றும் தூண்"[4]

என்கிறது.

## தலைவன்

அக இலக்கியங்களில் எடுத்துரைக்கும் தலைவன் தன்னிகரில்லா தன்மையுடையவன். உள்ளப்புணர்ச்சியை விரும்பி நிற்கும் தலைவன் தலைவியின் தன்மைகளைப் பாராட்டுகிறான். தலைவியின் இளமையும் அழகையும் கண்டு வியக்கிறான்.

தலைவன், தலைவியின் மீது வைத்திருக்கும் அன்பை உயிரினும் சிறந்ததென்றும் கிடைத்தற்கரிய தலைவியின் அன்பு கடல் சூழ்ந்த உலகத்தைப் பெற்று வாழ்வதைவிடப் பெரியது என்கிறான். இதனை,

"கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ டிலனான் நின்னுடை நட்பே"[5]

என்று தலைவியின் மீதுள்ள காதலைப் புலப்படுத்துகிறான்.

அக இலக்கியத்தில் சுட்டப்பெறும் தலைவன் தொழிலை உயிரினும் மேலாகப் போற்றியவன் தம்முடைய முன்னோர் சேர்த்து வைத்த பொருளைப் பயன்படுத்தவில்லை. பிறரின் உழைப்பிலிருந்து வந்த பொருளைப் பயன்படுத்துவதை இழிவு என்று கருதினான். இதனை,

"வினையே ஆடவர்க்கு உயிர்"[6]

என்கிறது குறுந்தொகை.

## நற்றாய்

அகத்திணை மாந்தர்களுள் தலைவியின் தாய் நற்றாய் எனவும், தோழியின் தாய் செவிலி எனவும் அழைக்கப்படும் மரபினைத் தொல்காப்பியர் சுட்டுவர். தலைவனுக்கும், தலைவிக்கும் இடைப்பட்ட உணர்வுப் பரிமாற்றத்திற்கு அமைந்த இணைப்புப் பாலமாகத்

தோழி அமைதல் போன்றே தாய்க்குச் செவிலி விளங்குகிறாள். இலக்கணத்தில் செவிலி-நற்றாய் என அழைக்கப்படினும் இலக்கியத்தில் இருவரும் அன்னை என்றே அழைக்கப்படுகின்றனர்.

## செவிலி

தலைவியின் களவு வாழ்க்கையிலும் கற்பு வாழ்க்கையிலும் செவிலி அவளின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குகிறாள். செவிலி தலைவிக்கு எல்லா நிலைகளிலும் உதவியாக இருப்பதோடு அவளின் இன்பதுன்ப நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறாள். தலைவனும் தலைவியும் குடித்தனம் நடத்தும் சிறப்பினைக் கண்ட செவிலி அதை நற்றாயிடம் கூறி மகிழ்கிறாள்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கக் கழாஅ நுடி இக்
குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான்றுடிந்தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்மலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றெண்ணுதல் முகனே"[7]

என்று தலைவி தலைவனுக்கு மோர்க்குழம்பு வைக்கக் கட்டித்தயிரைப் பிசைந்தாள். தயிரைப் பிசைந்த விரல்களைக் கழுவ நேரமில்லாதநிலையில் உடுத்தியிருந்த புடவையிலேயே துடைத்துக்கொண்டாள். பின் தயிரைத் தாளிக்கும் பொழுது எழுந்த 'குய்ப்' புகையினால் கண்களில் கண்ணீர் வடிய அதைத் தயிர்க்கையுடன் துடைத்தவளாய் கண் எரிச்சலுக்குக் கலங்காத தலைவி கணவன் வந்ததும் அன்புணர்ச்சியுடன் ஆக்கிய உணவைப் பரிமாறினாள். தலைவனோ தலைவியின் சமையலை மெத்தப்புகழ்ந்தான். இந்தக் காட்சியைக் கண்ட செவிலித்தாய் நற்றாயிடம் மகள் குடும்பம் நடத்துவதைக் கூறி மெய்சிலிர்க்கிறாள்.

## பாங்கன்

தலைவிக்குத் தோழி உறுதுணையாக அமைவபோல தலைவனுக்கு பாங்கன் தோழனாக உள்ளதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைகிறாள். அக இலக்கியங்களில் பாங்கனை இடிக்கும் 'கேளீர்' எனவும், 'சிறாஅரமறு நண்பன்' எனவும், 'தோழன்' எனவும் அழைக்கப்படுகிறான். தலைமை நிலையுடைய தலைவனும் இடித்துரைக்கும் பாங்கனை உடையனென்னும் செய்தி நட்பின் உயர்வை புலப்படுத்துகிறது.

தலைவனின் உடல், மனம் போன்றவற்றில் பல்வேறு மாற்றம் நிகழ்கிறது. இவ்வேறுபாட்டை அறிந்துகொண்ட பாங்கன் தலைவனிடம் வினவினான். அதற்குத் தலைமகன் ஒரு குறமகளின் மேல் யான் கொண்ட காமத்தால் இந்நிலையானேன் என்று கூறுகிறான்.

"மால்வரை யழிதருந் தூடிவெள் ளருவி
கல்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரல்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவள் வரவித் தன்றே"[8]
என்கிறான். இதனை திருவள்ளுவரும,
"ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு"[9]

என்கிறார். காதல் என்பது கண்மூடித்தனமாக இல்லாமல் பகுத்தறிவு நிரம்பியதாக இருக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டை எடுத்துரைக்கும் தன்மை உடையவனாக பாங்கனின் செயல் அமைந்துள்ளதை மேற்கூறிய செய்திகள் வழி அறியமுடிகிறது.

## முடிவுரை

அகத்திணை மாந்தர்களில் தோழி இல்லையேல் காதல் இல்லை; அகப்பொருளும் இல்லை என்று சுட்டும் அளவிற்கு சிறப்புப் பெற்றவளும், களவு, கற்பு ஆகிய இருநிலைகளிலும் பெரும்பாங்கு வகிப்பவளும், தலைவனுக்கும் தலைவிக்கும் இடைப்பட்ட உணர்வுப் பரிமாற்றத்திற்கும் அமைந்த இணைப்புப் பாலமாக தோழி திகழ்கின்றாள். தோழியைப் போன்றே நற்றாய், செவிலி, பாங்கன் போன்றோர் விளங்குகின்றனர் என்பதை சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியலாம்.

## தொகுப்புரை

இலக்கிய உலகில் மாந்தர்கள் பேசுவதைக் கூற்று என்று அமைத்துக்கொண்டனர். சங்க அக இலக்கியங்கள் பெரும்பாலும் மனிதகுலத்தின் அகஒழுக்கத்தினை வெளிப்படுத்தவே படைக்கப்பட்டது. அகத்திணை மாந்தர்களான தோழி, தலைவி, தலைவன், நற்றாய், செவிலி, பாங்கன் ஆகியோரின் குணநலன்கள், அவர்கள் உறவுகளோடு கொண்டிருந்த அன்புணர்வு ஆகியவை பற்றிய செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. ச. திருஞானசம்பந்தம், பொருளதிகாரம் மூலமும் உரையும், முதல்பதிப்பு – 2020, சென்னை. பா.எண்.206, பா.வரி.1-2, பக்.எண்.201
2. நா.மீனவன், அகநானூறு, முதல்பதிப்பு – 2004. சென்னை. பா.எண்.196, பா.வரி.1-4, பக்.எண்.172
3. சு.ப. அண்ணாமலை, கலித்தொகை, முதல் பதிப்பு, சென்னை. பா.எண்.6, பா.வரி.9-11, பக்.எண்.29.
4. பரிமேலழகர், திருக்குறள், முதல் பதிப்பு – 2013. குறள் எண்.615. ப.எண்.154.
5. தமிழண்ணல், குறுந்தொகை, பா.எண்.300, பா.வரி.9-10, பக்.எண்.356.
6. தமிழண்ணல், குறுந்தொகை, பா.எண்.135, பா.வரி.1, பக்.எண்.176.
7. தமிழண்ணல், குறுந்தொகை, பா.எண்.167, பா.வரி.1-6, பக்.எண்.209-210.
8. தமிழண்ணல், குறுந்தொகை, பா.எண்.95, பா.வரி.1-5, பக்.எண்.134.
9. பரிமேலழகர், திருக்குறள், முதல் பதிப்பு – 2013. குறள் எண்.1088, ப.எண்.272.